மதுரைச் சொக்கநாதர்

திருவிளையாடலம்மானை



அரும்பதக்குறிப்புரையுடன்

ஒக்கூர் நா. சா. சாத்தப்ப செட்டியார்

பதிப்பித்தது.

14-2

உ

சிவமயம்

திருநெல்வேலி நாகலிங்கப்பிள்ளை

பாடிய

மதுரைச் சொக்கநாதர்

திருவிளையாடலம்மானை

ஒக்கூர், நா. சா.

இராமநாதன் — மீனாக்ஷி

திருமண வெளியீடு

ஆனந்தஞு ஆனிமீ 23உ (7—7—74)

உ

சிவமயம்

பதிப்புரை.

ஆடலேற்றினுன் கூடலாலவாய்
பாடியே மனம் நாடி வாழ்மினே!—தேவாரம்

மதுரைச் சொக்கநாதரின் திருவிளையாடல்களைக் கூறும்நூல்கள் பல. அவற்றுள் திருவிளையாடலம்மானை என்பதும் ஒன்ருகும். இது பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராண வரிசையை அனுசரித்ததாகும். காப்பு உட்பட 65 செயுட்களைக் கொண்ட இச்சிறுநூல் திருத்தணிகைச் சரவணப் பெருமாளையரால் 1838ம் ஆண்டிலும் இரண்டாம்பதிப்பு யாழ்ப்பாணம் சோதிடப் பிரகாசயந்திரசாலையில் 1922லும் வெளியிடப்பட்டது.

திருமயிலை திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள் யாழ்ப்பாணத்துப் பழை – கண்டிகைக் கனக சபாபதிப்பிள்ளையவர்களைக் கொண்டு ஓர் அரும்பதக் குறிப்புரை எழுதுவித்து 1959 நவம்பர் மீ மூன்ரும் பதிப்பாக வெளியிட்டார்கள்.

நூலாசிரியர் திருநெல்வேலி நாகலிங்கப்பிள்ளையைப் பற்றி யாதொரு விவரமும் தெரியவில்லை.

இத்துடன் பரஞ்சோதிமுனிவர் அருளிய திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பாவையும் சேர்த்துள்ளேன்.

இப்போது இப்பிரதிகள் கிடைப்பது அரிது. எனது குமாரன் திருவளர்ச்செல்வன் இராமநாதனுக்கும், கீழப்பூங்குடி கூ.க.சித.அரு. அருணசலம் செட்டியார் குமாரத்தி திருவளர்ச்செல்வி மீனட்சிக்கும் ஆனந்த ஆண்டு ஆனித்திங்கள் 23ம்நாள் (7—7—74) நடைபெற்ற திருமணத்தின்போது அன்பளிப்பாக வழங்கியது.

7—7—74
ஒக்கூர்

அன்புள்ள,
நா. சா. சாத்தப்ப செட்டியார்.

14-2

உ
கணபதி துணை

பரஞ்சோதி மாமுனிவர்

அருளிச்செய்த

மதுரை அறுபத்து நான்கு திருவிளையாடற் போற்றிக் கலி வெண்பா.

காப்பு

நாற்றிக்கும் போற்று நதி மதுரைச் சொக்கரையாம்
போற்றிக் கலிவெண்பாப் போற்றிசெயச்—சீற்றமதன்
றைக்குஞ் சரமுகத்தான் சாயவிழித் தோனுதவு
கைக்குஞ் சரமுகத்தான் காப்பு.

நூல்

பூமேவு கற்பகநா டாளும் புரந்தரனுர்
தீமை விருத்திரனைச் செற்றபழி — போமாறு
பொற்கமலந் தோய்ந்து விமானமிசைப் பூசிக்க
நற்கருணை செய்த நலம்போற்றி — நற்றவத்தோர்
ஈசனுர் சாத்துமெழின் மலரைக் கால்சிதைத்த
வாசவனுர் வெள்ளானை மண்ணிழிந்து — பூசனைசெய்
தல்லற் படுசாபந் தீர வருள்சுரந்த
மல்லற் கருணை வளம்போற்றி — நல்வணிகன்
கண்டுவந்து கூறக் கனவினருட் சித்துருவங்
கொண்டுவந்து காடெறிந்து கோநகரங்— கண்டிடெனக்
கொத்தரு நிம்பக் குலசேகரனையெதிர்
சித்தரா யாட்கொண்ட சீர்போற்றி — பத்தி

மலையத்துவசன் மகந் தன்னின் மூன்று
முலை யுத்தமியாய் முளைத்துக் — கலைமுழுதுங்
கற்றுமுடி சூடிக் கயற்கண்ணி வெங்கலியைச்
செற்றுலகை யாண்டிருந்த சீர்போற்றி — கொற்றமணித்
தேரேறி யெட்டுத் திசைவென்று நந்திகணப்
போரேறி வென்றெதிர்க்கும் போதிலொரு — வாரேறு
கொங்கை மறைந்தமதிக் கொம்பைமணஞ் செய்துமுடி
மங்கலஞ் செய்த வளம்போற்றி — அங்கனக
மன்றுடல் வேட்டவிரு மாதவர்க்கு வெள்ளிமன்றுள்
நின்றுடிக் காட்டு நிலைபோற்றி — குன்றமென
முன்ன மலைபசித்தீ மூளுங் குறள்வீரற்
கன்ன மலையீந்த அருள்போற்றி — பின்னுமவன்
வெய்யபசிக் கன்னக் குழியுநீர் வேட்கைக்கு
வையையுந் தந்தவரம் போற்றி — ஐயைதனை
ஈன்றுள் கடலாட வேண்ட வெழுகடலுஞ்
சான்று வர நிறுத்துந் தாள்போற்றி — வான்றூழ
வாழுமலை யத்துவச மன்னனைக்கூஉய்த் தேவியொடும்
ஆழிபடி வித்தவருள் போற்றி — வேள்விவரு
வில்வளைக்கை நங்கை விரலுக் கிரகுமரச்
செல்வனைப் பெற்ற திறம் போற்றி — செல்வனுக்கு
மன்றன்முடித்து வளைசெண்டு வேல் கொடுத்து
வென்றிமுடி சூட்டும்விறல் போற்றி — வன்றிறல்வேல்
வேலை சுவற விடுத்துக் கிரகுமரன்
ஞாலம் புரந்தநலம் போற்றி — வேல்வலக்கைச்
சேயனைய வுக்ரன் றிகிரியெறிந் திந்திரன்பார்
சாய முடிசிந்து சயம்போற்றி — ஆயவரி
வண்டலம்பு தார்க்குமரன் மேருமணி முடிமேற்
செண்டெறிந்து வைப்பெடுத்த சீர்போற்றி —
பண்டொருநாள்
ஆறறிய வந்தணருக் காதிமறைப் பொருளைத்

தேற விரித்த திறம்போற்றி — ஈறடைந்த
தென்னன் குமரன் திருமுடிக்கு வாணிபராய்
நன்மணிகள் விற்ற நலம்போற்றி — நன்னகர்மேல்
வென்றி வருணன் விடுத்த கடல்பருகத்
துன்றுமுகி லுக்கேவுஞ் சூள்போற்றி — கன்றியவன்
வான்மாரி யேழும்விடுப்ப மழைநான்கும் போய்
நான் மாடமான நலம்போற்றி — தேனிதழி
வைத்தமுடி மறைத்து மாடநகரெங் கெங்குஞ்
சித்தரா யாடியருள் சீர்போற்றி — சித்தராய்
மன்னவன் கைக்கரும்பை வாங்கிக் கல்யானைக்குத்
தின்ன வளித்த திறம்போற்றி — தென்னவன்மேல்
வெங்க ணமணர் விடுத்த களிற்றைநர
சிங்கசரந் தொட்டெய்த சீர்போற்றி — தொங்குதிரை
மூப்பிளைய காளை மூலையுண் குழவியெனக்
கோப்பருவங் கொண்ட குணம்போற்றி —

மாப்பெரியோர்

தேறுநடந் தன்னையொரு தென்னன் றனக்கிரங்கி
மாறி நடஞ்செய்த மலர்போற்றி — ஆறடைந்தோர்
வஞ்சி யுயிரிழப்ப நாடுமறப் பழியை
அஞ்சி வெளிசெய்த வறம்போற்றி — வஞ்சமனத்
தாயைப் புணர்ந்தமகன் றந்தை தனைவதைத்த
தீயபழி தீர்த்தவருட் சீர்போற்றி — தாயனைய
ஆசான் மனைவிதன்மே லாசைவைத்த மாணவனைக்
கூசாமற்கொன்ற கொலை போற்றி — மாசமணர்
வல்வித்தை செய் துவிடு வன்னஞ்ச வாளரவைக்
கொல்வித்த நல்லகுணம் போற்றி — வல்லமணர்
கூரிய கோட்டாவை வரவிடுப்பக் கொல்லேற்றால்
வீரியஞ் சாய்த்த விறல்போற்றி — தாரணியில்
வெந்திறல்வேன் மீனவன்முன் மெய்க்காட்டிட்

டன்புடைய

மந்திரியைக் காத்த வளம்போற்றி—நொந்திரந்த
கொற்கையர்கோ வேந்தன் குறையிரப்பச் சித்தராய்ப்
பொற்குவை தந்த புகழ்போற்றி—நற்குவளை
மையேற்ற வாட்கண் வணிகமடவார்க் குவளை
கையேற்றி மாலேற்றுங் கைபோற்றி—மைதீரப்
பட்டமங்கைப் பாறையுரு நீத்தாறு பைந்தொடியார்க்
கட்டசித்தி யிந்த வருள்போற்றி—கட்டவிழார்த்
தாராற் கரையிரவிற் ருழ்திறந்து காப்படைத்துச்
சீராற் விடைபொறித்த சீர்போற்றி—ஆரானை
மூண்டுபொருந் தென்னன் முனைப்போர்க்குத்
தண்ணீர்தந்
தாண்டகருணையறம் போற்றி—ஈண்டயன்மால்
வன் மனத்துக்கெட்டான் வடிவெடுத்துப்
பொன்னனையாள்
நன் மனையிற்சென்ற நடைபோற்றி—தென்னனெதிர்
ஆயிரவாம் பரிக்கோ ராடவனை யோடையினில்
வீயவலந்திரித்த வேல்போற்றி—தூயவளம்
ஒல்கு மடியாற் குலவாத் தனிக்கோட்டை
நல்குங் கருணை நலம்போற்றி—நல்வணிகன்
மாமனென வந்து வழக்குரைத்து ஞாதியர்பாற்
சேமநிதி வாங்கியருள் சீர்போற்றி—கோமகனை
ஆட்டியவன் பழிதீர்த் தாண்டச் சிவலோகங்
காட்டியருள் கருணைக் கண்போற்றி—பாட்டிசைக்குப்
பாண னடிமையெனப் பாடி விறகெடுத்த
நாண மிலாத நடைபோற்றி—பாணனுக்குச்
செந்தமிழாற் றீட்டுந் திருமுகத்தைச் சேரனிடைத்
தந்தருளிச் செய்த தனம்போற்றி—வந்திறைஞ்சி
அற்பொழியு மாரிவெள்ளத் தாழ்ந்திசைக்கும்
பாணனுக்குப்
பொற்பலகையிட்ட புகழ் போற்றி—கற்பதனுள்

மாட்சிபெறு பாடினியை வாதுக்குத் தோற்றுடன்
ரேட்சுமையாத் தாங்குவித்த சூள்போற்றி—காட்சிபெற
மாயாமல் வெஞ்சுரத்து வல்லேனக் குட்டிகட்குத்
தாயாய்முலை கொடுத்த தாய்போற்றி—வீயாத
ஏன மிரண் டாறனையு மீராறுமந்திரியா
மீனவனுக் கீந்த விறல்போற்றி—மானவலி
எய்த்தெளிய ஞன விரும்புட் குபதேசம்
வைத்துவலி தந்த வரம்போற்றி—சித்தநெகிழ்
பத்தியினுற் சூழ்ந்துவழி பாடுசெய்யு நாரைக்கு
முத்தி கொடுத்த முறைபோற்றி—சித்தரணி
கோளரவு நான்மாடக் கூடலை யாலவாய்
வாளகிரி போல்வளைந்த மாண்போற்றி—கோளமரிற்
சுந்தரப் பேரம் பெய்து சோழன் கடற்சேனைக்
கந்தர நாடீந்த வருள்போற்றி—செந்தமிழ்நூல்
ஆய்ந்தவர் கல்வி யளந்தறியும் பொற்பலகை
ஈந்த கருணை யிசை போற்றி—வேந்தனிடைச்
சொற்சுவையாற் பாட ருெடுத்துத் தருமிக்குப்
பொற்கிழி தந்த புகழ் போற்றி—நக்கீரன்
மெய் வெந்தழற் கண்ணுல் வெந்தோடை வீழ்ந்தோனைக்
கைதந் தேறிட்ட கரைபோற்றி—மைதவிர
ஏதமுறுங் கீரர்க் கியற்றமிழைத் தென்மலய
மாதவனுற் றேற்றுவித்த மாண்போற்றி—போதணிந்த
மங்கல மண்டபத்து வந்தூமன் சங்கத்தார்
சங்கையறத் தேற்றுந் தமிழ்போற்றி—சங்கையாய்ப்
போன விடைக் காடன்பின் போய்ப்பாடல்கேட்டரசன்
மான நிதி நல்குவிக்கு மாண்போற்றி—மீன்மகனுய்ச்
செங்கையொரு நான்குடைய திண்மீன் பிடித்துவலை
மங்கையை வேட்ட மணம்போற்றி— துங்கமறை
ஆன்றதிரு வாதவூ ரந்தணருக்கைந் தெழுத்தின்
மூன்று பொருடேற்று முறைபோற்றி—தேன்றதும்பும்

வேம்பு நறுந்தாரான்மூன் வெவ்வாய் நரித்திரளை
வாம்பரியாத் தந்த வரம்போற்றி—வாம்பரிகள்
நின்ற பரிகணிணம் பிடுங்கி யூளையிட்டுத்
தின்று நரியாகுஞ் செயல்போற்றி—அன்றொருத்திக்
காளாய் முதுகி லடிபட்டு மண்சுமந்து
தாளாண்மை செய்த சயம்போற்றி—கோளமணர்
வீறுகெடக் கூனிமிர்த்து வெப்பொழித்துப் பாண்டியனை
நீறுபுனைவித்த நிலை போற்றி—சீறமணர்
அங்கனலும் வேகவதி யாறுந் தமிழறிய
வெங்கழுவி றேற்றும் விறல்போற்றி—அங்கொருத்தி
மன்றற்குச் சான்றாக வன்னி கிணறிலிங்கம்
அன்றழைத்துக் காட்டுமருள் போற்றி—அன்றிறைவன்
ஆற்றிய வாட லறுபத்து நான்கனையுஞ்
சாற்றிய தென்முனிவன் றாள்போற்றி—சாற்றிய
வண்ணங் கேட்டர்ச்சித்த மாமுனிவர் தாள்போற்றி
தண்ணங் கயற்கண்ணி தாள்போற்றி—அண்ணலருள்
போற்றி மதுரைநகர் விண்ணிழிந்த பொற்கோயில்
போற்றி கருணை முகப் போது.

திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா முற்றிற்று

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

மதுரைச் சொக்கநாதர்

திருவிளையாடலம்மானை

காப்பு

காக்கு மருட்சித்திக் கணபதியை வெள்ளிமன்றிற்
றூக்கினிறை யோர்பொருளாச் சொல்வர்கா ணம்மானை
தூக்கினிறை யோர்பொருளாச் சொல்வரே யாமாகில்
மாக்க ணிறையன்றி மதிப்பரோ வம்மானை
மதிக்குஞ் சரக்கன்று மாவுயர்ச்சி யம்மானை

அரும்பதக் குறிப்பு வெள்ளி மன்றில் தூக்கு—வெள்ளியம் பலத்தில் கால் தூக்கி ஆடிய, இன்இறை—இனிய (பட்சமுள்ள) சுந்தரேசர், இறையோர் பொருள் கணபதியைச் சுந்தரேசர்பொருளாச் சொல்வர்; அதாவது இருவரும் ஒரு பொருளென்பர்: இருவருக்கும் பேதமில்லையென்றபடி (உருவத்தில் இரண்டாகப் பூசிக்கப்பட்டாலும்) தூக்கின்+நிறை+ஓர்+பொருளாகச் சொல்பவர்—தராசில் போட்டு நிறுக்கும் பட்சத்தில் சரியான நிறையுள்ள பொருளாய்க் காணப்படுமெனின் மனிதர் பாவிக்கும் நிறைகளன்றி (Weights) எடைகள் எப்படி மதிக்கலாம், மாவுயர்ச்சி—பெரிய உயர்வு. உதாரணமாகப் பொன்னுக்கு உண்டான மாற்று வித்தியாசம் நிறுப்பதனுல் கண்டுபிடிக்க முடியாது. ஆதலால் மாவுயர்ச்சி மதிக்கும் சரக்கன்று.

இன்னும் மதி+குஞ்சரக்கன்று எனப் பிரிக்கலாம். மதி-ஞானம். குஞ்சரக்கன்று-யானைக்குட்டி. "ஓம்" என்னும் பிரணவமே ரூபமாயுள்ள கணபதியே எல்லாரினும் மேலானவர் என்று பொருள் கொள்ளலாம்.

1. இந்திரன் பழி தீர்த்தது.

தேனூர் கடம்பவனத் தேசுதிகழ் சொக்கலிங்கம்
வானோரிறை பழியை மாற்றியதே வம்மானை
வானோரிறை பழியை மாற்றியதே வாமாகில்
கானுறுந் தார்வேளைக் காயாதே வம்மானை
காயாதோ பூச்சொரியக் கண்டதரு வம்மானை.

(அ-பு) மதுரை ஓர் காலத்தில் கடம்பவனமாயிருந்தது. அங்கே சொக்கலிங்கமுஞ் சுயம்பு மூர்த்தியாகக் காணப்பட்டது இந்திரன் தன் குருவாகிய வியாழ பகவானை நிந்தித்து ஓர் அசுரனை குருவாகக்கொண்டு ஓர் யாகத்தையும் செய்வித்தான். அவ்வசுர குரு அவிர்பாகத்தை அசுரர்களுக்குக் கொடுப்பதைக்கண்டு அவனை வெட்டிக் கொன்றான். அக்கொலைப்பழி இந்திரனைச் சூழ்ந்தது. சொக்கலிங்கப் பெருமானைத் தரிசிக்க அணுகிய அளவில் அது நீங்கிற்று. சொக்கநாதர் இப்படிப் பழியை மாற்றுந் தண்ணளியுடையராயின் ஏன் மன்மதனைக் காய்ந்தார்? உலகத்தில் பூச்சொரியக்கண்ட மரம் காய்ப்பது வழக்கம். மன்மதன் பூக்களைப் பாணமாகச் சொரிந்துகொள்ள ஈசன் அவனைக் காய்ந்தார். ஈசன் பூச்சொரிந்த மரமாகக் காய்ந்தார். காய்தல் — கோபித்தல்,—அழித்தல். காய்தல்—காய்களை உண்டாக்கல். கான்—வாசனை. இங்கே காய்தல் என்னும் சொல்லில் சிலேடை.

2. வெள்ளை யானையின் சாபந் தீர்த்தது.

பெரும்பணிபூண் டென்பணிமேற் பெற்றசொக்க ரன்பர்
அரும்பணிசெய் விந்தைகடம் பாடவியி லம்மானை [குழாம்
அரும்பணிசெய் விந்தைகடம் பாடவியி லாமாகில்
இரும்பணிக்கங் குண்டோநல் வெள்ளி தங்க மம்மானை
வெள்ளிமா தங்கமுற்று மேலான தம்மானை.

(அ-பு) துருவாச முனிவர் இந்திரனிடம் கொடுத்த பூமாலையை அவனது வெள்ளையானை காலால் மிதித்து அபசாரஞ்செய்த படியால் அதனைக் காட்டானையாகக் கடவதென்று முனிவர் சாபமிட்டார். அவ்வாறே அது காட்டானையாகிக் கடம்பவனநாதரைத் தரிசித்துச் சாபத்தை நீக்கிக்கொண்டது. பணி-பாம்பு, வேலை, ஆபரணம். கடம்பாடவி=கடம்பம்+அடவி. கடம்பாடவியில் ஆபரணத்திற்கு வேண்டிய வெள்ளி தங்கம் அகப்படுமோ? இந்தக் கேள்வியேன்? வெள்ளி மாதங்கம் சேர்ந்து மேன்மையானதென்று சொல்லப்படுகையில், அங்குற்ற வெள்ளி மாதங்கம் வெள்ளையானையே மாதங்கம்-யானை இங்கே வெள்ளி மாதங்கம் என்பதிற் சிலேடை.

3. திருநகரங் கண்டது

தொண்டர்பணி சொக்கேசர் சொல்லரிய மாதவர்சூழ்
வண்டமர்க டம்பவன வாசிகா ணம்மானை
வண்டமர்க டம்பவன வாசியே யாமாகில்
கண்டறியா ரோமடவார் காமநல மம்மானை
காமதுரை யென்றூர்முன் கண்டவர்கா ணம்மானை.

(அ-பு) வனவாசி-காட்டில் சஞ்சரிப்பவன். இங்கே காம என்பது சிலேடை. காமதுரை,—கா+மதுரை—சோலைசூழ்ந்த மதுரை; காம+துரை—காமமுள்ள தலை

வன். இவர் காமதுரை என்று ஊரவர்கள் சொல்வார்கள் என்று கருத்துப்படும்படி காட்டப்பட்டது. சோலை சூழ்ந்த மதுரையை முதலில் கண்டவர் சொக்கரே என்பது வெளிப்படை.

"ஆதியே யாலாவாயிலப்பனே யருள்செய்யாயே"
"மூத்தானை யெல்லார்க்கும் முன்னே தோன்றி"

என்னும் அப்பர் தேவார வாக்குகள் இங்கே சிந்திக்கப்பாலன.

4. தடாதகைப் பிராட்டியார் திருவவதாரம்.

திகழுமது ரைக்கரசு தென்னன்மல யத்துவசன்
மகளெனவே யங்கயற்கண் வந்துதித்தாளம்மானை
மகளெனவே யங்கயற்கண் வததுதித்தாளாமாகில்
பகையுடை வேந்தர்க்குப் பயமுண்டோ வம்மானை
பயந்தரித்தப் பாலிருப்பார் பத்தாவே யம்மானை.

(அ–பு) பயந்தரித்தப் பாலிருப்பா ரென்பதில் பயம் என்பதன் பொருள் வெள்ளம், ஜலம், கங்கை,—அப்பால்–அவ்விடத்தில். அங்கயற்கண்ணியுடன் கங்கையும் இருப்பாள் பயம் ஏது என்றபடியாம்.

5. திருமணம்

திக்கெலாம் வென்றுதனச் சீர்பெறவெள் ளிக்கிரிசென்
றிக்கயற்கண் மாதிறைகொண் டிங்குவந்தா ளம்மானை
இக்கயற்கண் மாதிறைகொண் டிங்குவந்தா ளாமாகில்
மைக்குழற்கு வந்தான் மதிகுலனோ வம்மானை
மதிமேற் குலவான்கோ மான்மதுரைக் கம்மானை,

(அ–பு) மாதிறை–மாது+இறை; இறை–சிற்றரசரால் இறுக்கப்பட்ட தொகை. அதாவது வரி போன்றது. மைக்குழல்–இங்கே மீநாச்சி.

குழற்குவந்தான்-குழற்கு+வந்தான்—வரன்
குழற்கு+உவந்தான்—வரன் } சொக்கன்

மதிகுலனே—தகுந்த குலத்தைச் சேர்ந்தவன் தானே?

சோழன் சூரிய வமிசத்தவனென்றும் பாண்டியன் சந்திர வமிசத்தவனென்றும் சொல்லப்படும். தடாதகைப் பிராட்டியைக் கலியாணஞ் செய்ததினுல் சந்திர வமிசமெனும் மேற்குலத்தவனும் மதுரைக்குக் கோமானும் ஆயினுன். இங்கே மதிகுலன் என்பது சிலேடை.

6, வெள்ளியம்பலத் திருக்கூத்தாடியது

சிதம்பரம்போல் வெள்ளிமன்றிற் றென் மதுரைச் சுந்தர
பதஞ்சலிவேங் கைப்பாதர் பார்த்து நின்ரு ரம்மானை [னைப்
பதஞ்சலிவேங் கைப்பாதர் பார்த்துநின்ரு ராமாகில்
கதம்பவனத் தண்ணல்செயுங் காரணமே தம்மானை
காரணத்தைக் கேட்கிற் கனக்கூத்தே யம்மானை

(அ-பு) கதம்பு—கடம்பு. வேங்கைப்பாதன்—வியாக்கிரபாதர். கடம்பவனத்தண்ணல் என்ன செய்கிருர்? அவர் கூத்தாடுகிருர். கனம்—ப்பாடலில் ஒருவகை. கனக்கூத்து-பாடும்போது பாடலுக்கேற்றபடி அபினயஞ் செய்து ஆடுதல்.

7. குண்டோதரனுக்கு அன்னமிட்டது

தென்மதுரை யார்மணத்திற் றேவி யமுதுதரத்
தன்னிகரில் குண்டோ தரனுண்டா னம்மானை
தன்னகரில் குன்டோதரனுண்டா னுமாகில்
அன்னமலை யென்னமிகுந்தாக்குமோ வம்மானை
ஆக்கவல்லா ராக்குமலை யன்னமவ ளம்மானை

(அ-பு) அன்னமலையென்ன ஆக்குமோ-குண்டோதரன் உண்ண மலைக் குவியலாகச் சோற்றை ஆக்கி வைக்க முடியுமோ? மலையன்னம்—மலைப்பெண்-பார்வதி. இங்கே மலையன்னம் அன்னமலையாக்கல் சிலேடை.

8. அன்னக்குழியையும் வைகையையும் அழைத்தது.

அன்னக் குழாமதுரை யாதிபர்குண் டோதரற்கா
அன்னக் குழிவையை யாறழைத்தாரம்மானை
அன்னக் குழிவையை யாறழைத்தா ராமாகில்
அன்னவர்நஞ் சுண்ட தறக்கொடிதே யம்மானை
அறக்கொடியார் வாழ்வார்க் கமுதுவிட மம்மானை,

(அ-பு) அறக்கொடிது—அதிகம் கொடியது. அறக் கொடியர்—முழுதாயக் கொடியவர்—மறம்பூண்டவர். கொடியவரிடும் உணவு அமிர்தமாயிருந்தாலும் விஷமென்று தள்ளபடும். ஔவையார் என்பெலாம்பற்றி எரியுதே அன்பிலாளிட்ட அமுது என்றும் ஒப்புடன் முகமலர்ந்து உபசரித்து உண்மைபேசி உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும் என்றும் கூறியவற்றை ஒப்பிடுக.

9. ஏழுகடலழைத்தது.

வண்டுறைதார்ச் சுந்தரனுர் மாமிபுன லாடமங்கை
விண்டுகட லேழழைத்தார் மெய்மதுரைக் கம்மானை
விண்டுகட லேழழைத்தார் மெய்மதுரைக் காமாகில்
தெண்டிரையேழ் சுற்றுமன்றோ தீவினைச்சென் றம்மானை
தீவினையேன் சுற்றுமெங்கோன் சிந்திக்கி லம்மானை

(அ-பு) தெண்டிரை ஏழ்-ஏழுகடல். தீவு-ஐம்புத் தீவு போன்றது (Island). தீவினையானவை ஈசுரபக்தியுள்ளவனைச் சுற்ரு தீவினை சுற்றுதல்-உலக வழக்கச்

சொற்றொடர். தன்வினை தன்னைச் சுற்றும் என்பது பழமொழி. இங்கே "தீவினை" என்பது சிலேடை.

10. மலயத்துவசனை அழைத்தது

மழைக்கடலிற் சென்றுடு மாமிக்காச் சுந்தரன்சீர்
தழைக்குமலயத் துவசனைத் தானழைத்தா னம்மானை
தழைக்குமலயத் துவசனைத் தானழைத்தா னுமாகில்
அழைப்பதெவன் வானடைந்த வம்மானை யம்மானை
அம்மானைக் கையில் வைத்த வண்ணலன்றோ வம்மானை

(அ-பு) வானடைந்த அம்மான்-இறந்து சுவர்க்க லோகஞ் சென்ற மாமனாகிய மலயத்துவசன். அம்மானைக் கையில் வைத்த அண்ணல்-அழகிய மானைக் கையில் கொண்டுள்ள சிவபிரான். சீர்தழைக்கும்- புகழ்விளங்கும். இங்கு அம்மான் என்பது சிலேடை.

11, உக்கிரபாண்டியர் திருவவதாரம்.

மக்கள்புகழ் சுந்தரப்பேர் மாமுடிதங் கத்தணிந்த
சொக்கனருளுக்ர சுதன்வளர்ந்தா னமானை
சொக்கனருளுக்ர சுதன்வளர்ந்தா னுமாகில்
உக்கிரற்குத் தாயா ருயர்ந்தவரோ வம்மானை
உயர்ந்தமலைப் பெண்ணென் றோதுவா ரம்மானை.

(அ-பு) உயர்ந்த மலைப்பெண்-உயர்ந்த+மலைப் பெண்-உயர்ந்தமலை+பெண்.

12. உக்கிரகுமாரனுக்கு வேள் வளை செண்டு கொடுத்தது

ஓர்மதுரைச் சுந்தரனு ருக்கிரனுக் கீந்தரசு
வீரமுறத் தாமளித்தார் வேல்வளைசெண் டம்மானை
வீரமுறத் தாமளித்தார் வேல்வளைசெண் டாமாகில்
சார்விசயன் மோதத் தலைவிதியோ வம்மானை
தலைவிதிக்கு மாறுமருந் தார்முடித்தா ரம்மானை.

(அ—பு) விசயன்மோதல்-சிவபெருமான் வேடவடிவங்கொண்டு அர்ச்சுனனுடன் சண்டை செய்தபோது அவன் அவரை வில்லால் அடித்தல்.

தலைவிதிக்குமாறு மருந்தார் முடித்தார்—''விதியினை யாவரோ விலக்கு நீரினர்'' என்னுங் கந்தபுராணமும் ''ஊழிற் பெருவலியாவுள'' என்னும் திருக்குறளும் ஒப்பிடத்தக்கன.

13. கடல் சுவற வேல் விட்டது

பையரவம் பூண்ட பதிமதுரைச் சொக்கேசர்
செய்யடிமை கொண்டார்மெய்ச் செல்வர் தமை யம்மானை
செய்யடிமை கொண்டார்மெய்ச் செல்வர் தமை யாமாகில்
மெய்யர்செய்யத் தக்கமிக்க வேலையுண்டோ வம்மானை
வேலையின்மேல் வேலைவிடும் வேலைசொல்வா ரம்மானை

(அ—பு) வேலை—சமுத்திரம். வேலாயுதம். தொழில் சொக்கநாதர் சமுத்திரத்தின் மேல் வேலாயுதத்தை எறிந்து வற்றச் செய்யும்படி உக்கிரகுமாரனுக்குக் கட்டளையிட்டார். அங்ஙனமே நிகழ்ந்தது வேலை யென்னும் மூன்று சொற்களையும் தொழில் என்னும் பொருள் கொள்ளின் வேலைக்குமேல் வேலை கொடுக்கும் தொழிலுள்ளவர் என்று கொள்ளலாம்.

14. இந்திரன் முடிமேல் வளையெறிந்தது.

படிபுரந்த சொக்கர்வளை பாண்டியன்கை யால்விடுத்து
முடிதகர்த்தா ரிந்திரனை முன்னாளி லம்மானை
முடிதகர்த்தா ரிந்திரனை முன்னாளி லாமாகில்
கொடிதவரைச் சேர்ந்துவிண்ணோர் கோவென்ற தம்மானை
கோவென்று சேர்ந்தாரைக் கொல்லியன்றோ வம்மானை.

(அ-பு) கொடிது அவரைச் சேர்ந்து விண்ணோர் கோ வென்றது– பாண்டியனைச் சேர்ந்து இந்திரனை வென்றது கொடிதாகும். கோ என்று சேர்ந்தாரைக் கொல்லி—ஆளுபவன் என்று தன்னை அடைந்தவர்களை மீளவிடாமல் அப்படியே தன்னுடன் சேர்ப்பவன். உதாரணமாக மாணிக்கவாசகர், நந்தனர், பெற்றான் சாம்பான் முதலிய சிவனடியவர்.

சேர்ந்தாரைக் கொல்லி என்னுந் தொடர் அவர் கொடியவரென்பதை வெளிப்படையாகக் காட்ட வைக்கப் பட்டது.

15. மேருவைச் செண்டால் அடித்தது.

நம்பன் மதுரேச னுடாளு மன்னவனாற்
செம்பொன்மக மேருவைச்செண் டாலடித்தானம்மானை
செம்பொன்மக மேருவைச்செண் டாலடித்தானு மாகில்
அம்புவியில் யார்யா ரடிபடா ரம்மானை
அடிக்குவருந்தினர்மே லன்பரெலா மம்மானை

(அ-பு) அடிக்கு வருந்தினர்—அவருடைய பாதாரவிந்தத்தை யடைய மெய்யடியா ரெல்லாந் தேடி வருந்தினர். அடிபட்டு வருந்தினரென்பது வெளிப்படை.

16. வேதத்துக்குப் பொருள் அருளிச் செய்தது.

நான்கா ரணப்பொருளாய் நற்றவர்மு னுற்றகுரு
நான்கா ரணப்பொருளா நம்புசொக்க னம்மானை
நான்கா ரணப்பொருளா நம்புசொக்க னுமாகில்
தான்குருவாய்க் கக்குவதேன் சாரமெலா மம்மானை
சாரங்கக் கையனன்றோ தன்னுமை மம்மானை

(அ—பு) தான் குருவாய்க் கக்குவதேன் சாரமெலாம்— குருமூர்த்தமாய் உபதேசிப்பது வேதசாரமாகிய உபநிடதங்களை. தான் குருவாய்க் கக்குதல்— தான் குரு மூலமாய் தீட்சை செய்தலும் அமையும். கும்பத்தைச் சிவமாகக்கொண்டு குருவும்சீடனும் கும்பத்துக்கு முக்கோணமாய் உட்கார்ந்து தர்ப்பைகளினால் இம்மூன்றையு மிணைத்துப் பின் மந்திரோபதேசம் செய்தலும் உண்டு. இது சிவம் குரு மூலமாய்ச் சீடனுக்கு உபதேசம் செய்வதாகிய முறை.

17. மாணிக்கம் விற்றது.

காணிக் கடவுள்சொக்கர் காவலவன் காதலற்கா
மாணிக்கம் விற்றார் மதுரையிலே யம்மானை
மாணிக்கம் விற்றார் மதுரையிலே யாமாகில்
பூணப் பணியுடையார் பொன்வில்லா ரம்மானை
பொன்னவையி னட்டம் பொருந்தினரே யம்மானை.

(அ—பு) பூணப் பணியுடையார் பொன்வில்லார்— அணியப் பாம்புள்ளவருக்குப் பொன்ஏது? அவர் பொன் விற்கமாட்டார். (பணி—ஆபரணமாகில்) பூணப் பணி யுடையார். இருக்கும் பொன்னெல்லாம் ஆபரணமாக்கு வார் எப்படிப் பொன் விற்பார். பொன்மலையாகிய மேரு மலையை வில்லாக்கியவ ராகையால் அவர் பொன்வில்லை உடையவர். அதாவது அவர் பொன்வில்லார்—பொன்னவையில் நட்டம் பொருந்தியவர். பொன்னவையில்— பொன்செய்வோர் சபையில் (Gold Market)

நட்டம் பொருந்தினர்— நஷ்டமடைந்தவர் என்பது வெளிப்படை. கனகசபையில் நடனஞ் செய்பவர் என்பது மறுபொருள்.

18. வருணன் விட்ட கடலை வற்றச் செய்தது.

தொண்டர்சன னக்கடலைத் தூர்க்குமது ரேசரருள
கண்டறியா தேவுங் கடல்வருண னம்மானை
கண்டறியா தேவுங் கடல்வருண னுமாகில்
அண்டிவற்று மோமுகிலா லார்கலியு மம்மானை
ஆர்கலியு மாற்றுமுகி லன்றேசொக் கம்மானை

(அ-பு) ஆர்கலி- கடல். முகில் கடல்நீரை வற்றச் செய்துவிடுமா? முடியாது சொக்கர்தான் கடலை வற்றச் செய்யும் முகில். அவர் தம் சடையிலிருந்து முகில்களை யெழுப்பிக் கடல்நீரை உறிஞ்சும்படி செய்தார்.

19. நான்மாடக் கூடலானது

கான்மாலைச் சொக்கர்கொடுங் கார்விலக்கி யூர் புரந்து
நான்மாடக் கூடலென்று நாட்டினர்பேரம்மானை
நான்மாடக் கூடலென்று நாட்டினர்பே ராமாகில்
வான்மாரி கண்டு மலைக்குமோ வம்மானை
மலைக்கு மாரிக்கு மயங்கியவ ரம்மானை

(அ-பு) கொடுங்கார்- ஊரை யழிக்க வந்தமேகம். மழை பெய்யும்போது சொக்கர் நான்கு மேகங்களை உண்டாக்கி அவற்றைக் கூடமாக வளைப்பித்துக் கொடுங்காரின் மழைஉள்ளே விழவிடாமல் தடுக்கச்செய்தார். சொக்கர் வான்மாரி கண்டு மலைக்கார் அல்லது மயங்கார்.

மலைக்குமாரி- பார்வதி. இங்கே மாரி என்னுஞ்சொல் குவ்வுடன் சேர்த்துச் சிலேடையாய் மயங்க வைக்கப் பட்டது.

20. எல்லாம் வல்ல சித்தரானது

திகைத்தவரைக் காக்குந் திருமதுரைச் சொக்கலிங்கர்
சகத்திலெல்லாம் வல்லசித்தர் தாமானு ரம்மானை
சகத்திலெல்லாம் வல்லசித்தர் தாமானு ராமாகில்
மகத்துவமோ கங்கையைவைத் தேசுமப்ப தம்மானை
வைப்பார் களிச்சுமைக்கும் வல்லவரென் றம்மானை.

(அ-பு) வைப்பார் - வைத்துக் கொள்பவர். இங்கே கங்கையை வைத்திருக்கும் சொக்கர். களிச்சு- களித்து; கங்கையுடன் களிப்பதோடு உமையுடனும் களிக்க வல்லவராகையால் கங்கையை வைத்துச் சுமந்தனர். திகைத்தவரைக் காப்பவராதலின் தான்திகையார் என்றபடி.

21. கல்லானைக்குக் கரும்பு அருத்தியது

கல்லாடர் சொல்லினிமை கண்டசொக்கர் பாண்டியன்முன்
கல்லானை தின்னக் கரும்புதந்தா ரம்மானை
கல்லானை தின்னக் கரும்புதந்தா ராமாகில்
கல்லார்தோள் வேம்பன் கரும்பாமே யம்மானை
கரும்பொடுவேம் போர்வேளைக் காக்குமவ ரம்மானை

(அ-பு) கல்லோர்தோள்- மலைபோன்ற புயம்.

வேம்பன்- பாண்டியன். வேம்பன் கரும்பு- ஆரும் வேற்றுமைத் தொகை. சல்லானை பாண்டியன் கையிலிருந்த கரும்பைப் பிடுங்கியது. கரும்பொடு வேம்போர் வேள்- கரும்புவில்லுடன் வேகச்செய்யப்பட்டமன்மதன். வேளைக் காக்குமவர்- மன்மதன் மனைவி வேண்டியதற்கு அவளுக்கு மாத்திரம் புருஷனைகச் சஞ்சரிக்கச் செய்தவர். எரிபுனை நமதுநோக்கா லிறந்த நின்னுடலநீருய்

விரைவொடு போயிற்றன்றே வேண்டின ளிரதியன்ருட்
குருவமாயிருத்தியேனை யும்பரோ டிம்பர்க்கெல்லாம்
அருவினையாகி யுன்றனரசியல் புரிதியென்ருன்.

—கந்தபுராணம்

22. யானை ஏய்த்தது.

நின்றமதூ ரேசனுமை நேசன்பசு பாசன்
அன்றமணர் விட்டவலி யானையெய்தா னம்மானை
அன்றமணர் விட்டவலி யானையெய்தா ளுமாகில்
என்றவற்கேன் ரெண்டருக்கு ளேகெளிமை யம்மானை
ஏகவெளி யானின் றிருப்பதுமுண் டம்மானை.

(அ-பு) அவற்கு ஏன் தொண்டருக்குள் ஏகும் எளிமை- இவ்வளவு வலியுடையவர் ஏன் வலிமையில்லாத தொண்டருக்குள் போய்ச் சேர்ந்தார்.

ஏகு- எளிமை- வினைத்தொகை.

ஏகவெளி- ஒன்றும் காணப்படாத வெட்டவெளி. சிவபிரான் முதலில் ஆகாயமாகி அதனிடத்தே தங்குவதே எல்லா சிருஷ்டியும். ஆகாயமூர்த்தி யென்று இவர் தேவாரத்தில் வருணிக்கப்படுவர்.

ஏகவெளியன்-ஏக+எளியான் எனவும் பதச்சேதம் செய்து பொருள் கொள்ளலாம்.

நின்றிருப்பதுமுண்டு-நின்றிருக்கலாம்.

ஏகவெளியான் என்னுஞ் சொற்ரெடர் இங்கே சிலேடை.

23. விருத்த குமார பாலரானது.

ஏர்மதுரை யார் விருத்த ரின்குமரர் பாலரெனப்
பேர்கவுரி கண்டுநின்ற பேரோளியா ரம்மானே
பேர்கவுரி கண்டுநின்ற பேரொளியா ராமாகில்
ஓர்விதியேன் காணு னொளியா ரம்மானே
ஒளியாரைக்காணுத தோர் விதியே யம்மானே

(அ-பு) விதி- பிரமன், ஒளியார்- பிரபையுள்ளவர். தேடியுங் காணமுடியாமற் போனது பிரமாவின் விதி. அந்தஅநுபவம் இல்லாமற்போகும்படி அவர் ஊழ்வினை செய்துகொண்டது..

24. மாறியாடினது

பாடுபெறு மூன்று பதந்தூக்கி மேற்றூக்கி
ஆடுபத மூன்றுவெள்ளி யம்பலவ னம்மானே
ஆடுபத மூன்றுவெள்ளி யம்பலவ னுமாகில்
காடாங் கடம்புடைான் காலாறே வம்மானே
காலாறென் றேவழுதி கண்டனன்மூன் னம்மானே

(அ-பு) இராசசேகர பாண்டியனுக்காகக் கால்மாறி யாடியது. பாடுபெறும் ஊன்றுபதம்- ஒருகாலைத் தூக்கி மற்றக்காலை ஊன்றி ஆடுவதினுல் ஊன்றும் பாதம் உடம் பின் பாரம்முழுதையும் சுமந்து கஷ்டப்படும். ஆடுபதம் ஊன்று வெள்ளியம்பலவன்- தூக்கியாடிய பாதத்தை ஊன்றிய வெள்ளியம்பலவன். இந்தப் பாவின் இரண்டு வரிகளிலும் பதப்புணர்ச்சியால் மூன்று மூன்று என்று வருவதால் கால் ஆறு என்ருர்.வழுதி அப்படிக்கால்மாற்றி யாடியது காலுக்கு ஆறுதல் என்று கண்டே சொக்கரை இரந்தான். இதைக்காலாறு என்ருர். ஆறு இங்கே விகுதி கெட்ட தொழிற் பெயர்.

25. பழி அஞ்சியது

வழிக்கொண்ட வேதனில்லாண் மாண்டவகைபாண்டியற்கு
பழிக்கஞ்சிச் சொக்கருண்மை பண்டுரைத்தார ரம்மானை [ப்
பழிக்கஞ்சிச் சொக்கருண்மை பண்டுரைத்தாரர்மாகில்
அழிக்குந் தொழிலவர்க்கே தச்சமைய மம்மானை
அச்சமைய மன்றி யழித்தறியாரம்மானை

(அ—பு) வழிக் கொண்ட வேதனில்லாள்— பிரயாணஞ் செய்த பார்ப்பனி அழிக்குந் தொழிலவர்க்கு—சங்கார கர்த்தாவுக்குஏது+அச்சம்+உபயம்?

அச்சமையமன்றி— சங்கார காலத்தே யன்றி மற்ற வேளையில் அவர் அழிப்பதில்லை. அச்சமையம் என்பது சிலேடை.

26. மகா பாதகந்தீர்த்தது.

ஆபாவி யன்னையைத்தோய்ந் தப்பனைக்கொன் றேன்
மாபா தகந்தீர்த்த வள்ளல்சொக்க ரம்மானை [கொடிய
மாபா தகந்தீர்த்த வள்ளல்சொக்க ராமாகில்
சாபமலை யாயவர்பாற் சார்ந்ததே தம்மானை
சாராதோ சத்தியந்தப் பாகநின்று லம்மானை.

(அ—பு) சாபம் மலையால் அவர்பால் சார்ந்தது. ஏனென்றால் மற்றவர்களுடைய பாவங்களை விமோசனஞ் செய்வதால்; இது வெளிப்படை.

சாபமலை— மலைசாபம்—மலைவில். மேருமலையை வில்லாக வளைத்து திரிபுர சம்மாரஞ் செய்தார். சத்தியந் தப்பாக நிற்பவருக்கு (ஊரவர்களின்) சாபம் மலைமலையாய் வளரும்.

27. அங்கம் வெட்டியது

கொத்தலங்கற் சொக்கர் குருமனைவிக் காசைவைத்த
சித்தனங்கம் வெட்டிச் செயித்தனர்கா ணம்மானை
சித்தனங்கம் வெட்டிச் செயித்தனரே யாமாகில்
உத்தமமா ஞர்கைக் குயர்வாளே தம்மானை
உயர்வா ளொருபாக முண்டழகா வம்மானை.

(அ-பு) ஆசைவைத்த சித்தன்– ஆசைவைத்தமன துள்ளவன் அவரிடத்தில் வெட்டுவதற்கு வாள் ஏது? உயர்வாள் அவருக்கு ஒரு பக்கத்திலிருக்கையில் வாளுக்குக் குறைவில்லை என்றபடி. உயர்வாள்– இங்கே உமா தேவியார்.

28. நாகம் எய்தது

வென்றிமரு வாரசனி வெள்ளிமன்று ளானமணர்
பொன்றிடவிடும் பாம்பு தனையெய்தா னம்மானை
பொன்றிடவிடும் பாம்புதனை யெய்தா னுமாகில்
சென்றுசெவ்வா யெய்தவன்கண் டிங்களோ வம்மானை
திங்களுமெய் தான்கனலுஞ் செங்கதிரோ டம்மானை.

(அ-ப) மருவார் அசனி– பகைவருக்கு இடியேறு என்னும்படியானவன், செவ்வாய் – செவ்வையாய், கண்– இங்கே அதற்கு உவமான அம்பு. உவகை ஆகு பெயர் பாண்டியன் சொக்கரைத் தியானஞ் செய்து பிறைமுகக் கணையை விட்டு அந்தப் பாம்பைக் கொன்ருன். இதற்குமுன் பல அஸ்திரங்களை அவன்விட அவற்றைப்பாம்பு வாயால்கறித்துவிட்டது. பிறையென்பதைக் காண்பிக்கக் "கண் திங்களோ" எனப்பட்டது.

இன்னும் பாம்புக்குப் பகை சந்திரன். ஆகையால் அவன் பகைவனுக்கு விக்கினம்உண்டாக்குவான் என்று பிறைமுகக்கணை எடுத்திருக்கலாம்.

அமணர் பாண்டியனுக்குக் கெடுதல் உண்டாக்கச் செய்த யாகத்தில் ஓர் அசுரன் பாம்புருபமாய்ப் புறப்பட்டு வந்தபோது இவ்விதம் கொல்லப்பட்டான்.

வண்கண்–கொடுமை அல்லது கொடிய கண்–பெரிய வடிவத்தோடு வநத பாம்பைக் கொல்லவேண்டுமென்று இலக்குவைத்து எய்த கண்.

பாண்டியன் அம்பை விட்டபோதிலும் அவன் சொக்கர் சொற்படி நடந்தவனுகையால் அவர் எய்ததாகக் காட்டினுர் சொக்கருக்குச் சூரியன், சந்திரன், அக்கினி என்று மூன்று கண்கள். கடைசி அடியிலுள்ள எய்தானென்பது எய்தினுன் – அடைந்தான் – பெற்றுளான் என்று பொருள் கொள்ளற்பாலது.

29. மாயப்பசுவை வதைத்தது

தாயைப்போல் வான்மதுரை தன்னை யழிக்கவந்த
மாயப் பசுவை வதைசெய்தா னம்மானை
மாயப்பசுவை வதை செய்தா னுமாகில்
வேயொப்பார் தோளிபங்கன் மெய்க்கோவே யம்மானை
மெய்க்கோவும் பொய்க்கோவை வெல்லாதோ வம்மானை.

(அ–பு) அமணர் மறுபடி ஒரு மாயப்பசுவைவிட அதைக் கண்டு பாண்டியன் சொக்கரிடம் வேண்டிக் கொள்ளச் சொக்கர் தன்னுடைய நந்தியை ஏவி அதைக் கொன்றுர். பசுவாகில் சைவர்கள் ஒன்றும் செய்யார்க

ளென்று எண்ணிப் பசுவாய் வந்தான் அசுரன். இவன் பொய்க்கோ? சக்தி மெய்க்கோ? 4-ம் அடியிலுள்ள கோ—அரசன், கடவுள்.

30. மெய்க்காட்டிட்டது

வாழுமது ரேசரன்பு மந்திரிக்கா மன்னவன்முன்
ஏழுலகோர் போற்றமெய்க்காட் டிட்டனர்கா ணம்மானை
ஏழுலகோர் போற்றமெய்க்காட் டிட்டனரே யாமாகில்
சூழ்பகையா யன்றுவந்தான் ரேற்ருனே வம்மானை
தோற்ருனை விட்டாரோ சுற்றினு ரம்மானை.

(அ-பு) மெய்க்காட்டுதல்—Inspection. தோற்ருனே-தோற்றமாட்டானே-தோல்வியுற்ருனே. தோற்ருன்-அப்படியே.

சுற்றினுர்- அவன் வினையைவிட்டு அவனைச் சுற்றச் செய்தார். வினை சுற்றி மரணம் உண்டாயது.

31. உலவாக்கிழி யருளியது.

அலரா யிரந்தா ரணிமதுரைச் சொக்கர்தென்னற்
குலவாக் கிழிப்பொன் னுதவினு ரம்மானை
உலவாக் கிழிப்பொன் னுதவினரே யாமாகில்
தலையா லிரந்தார்க்குத் தனமேதோ வம்மானை
தனமொருபக் கத்துவந்து சார்ந்தமுத லம்மானை.

(அ-பு) உலவாக் கிழிப் பொன்- எடுக்க எடுக்கக் குறைவுபடாத பொன் முடிச்சு அல்லது பொட்டனம்.

தனம்- சொத்து; முலை (இங்கே பார்வதியார்)

32. வளையல் விற்றது.

நீடுகயற் கண்ணரியங்கி னின்றசொக்க ரன்புவைத்துத்
தேடு மவரவர்தஞ் சிந்தையுற்ரு ரம்மானை
தேடு மவரவர்தஞ் சிந்தையுற்ரு ராமாகில்
கூடுவிட்டுக் கூடுசென்று கொள்வாரோ வம்மானை
கொள்ளவளை விற்றுமறு கூடுசென்ரு ரம்மானை.

(அ-பு) மறுகு-தெரு; ஊடு-ஊடாக இங்கே கூடு என்பது சிலேடை

33. அட்டமாசித்தி உபதேசித்தது.

திருத்துமது ரைக்கடவுள் செவ்வேட்கு மென்முலைப்பால்
அருத்துமட வார்க்களித்தா ரட்டசித்தி யம்மானை
அருத்துமட வார்க்களித்தா ரட்டசித்தி யாமாகில்
கருத்திலரென் றேன்செய்தார் கற்சாப மம்மானை
கற்சாபங் கைமேலாங் கர்த்தர்கா ணம்மானை.

(அ-பு) மடவார்- கார்த்திகைப் பெண்கள்.

கற்சாபம்-கல்லாகப் போகும்படி இட்ட சாபம்; மேரு மலையாகிய வில்லு.

34. விடையிலச்சினை இட்டது.

புவிபுகழ்சொக் கேசரெதிர் போயழைத்துச் செம்பியனை
நவமதிலு ளாக்கியரு ணல்கிவிட்டா ரம்மானை
நவமதிலு ளாக்கியரு ணல்கிவிட்டா ராமாகில்
கவினிடப முத்திரையேன் காப்பினிட்டா ரம்மானை
காப்பவரு மீனமுறக் காண்பாரோ வம்மானை.

(அ-பு) விடை இலச்சினை- இடப முத்திரை (Seal) பாண்டியன் காலத்தில் சொக்கநாதர் கோயிலை இரவில் மூடும்போது பூட்டிக் கயல்முத்திரையைக் கதவுகளுக்கு வைப்பது வழக்கம். சோழன் சொக்கரைத் தரிசிக்க விரும்பியதால் அவனுக்காகச் சொக்கர் வேண்டிய கதவு களைத் திறந்து தரிசிப்பித்துப் பிறகு கதவுகளைப் பூட்டிக் கயல் முத்திரைக்குப் பதிலாகத் தமது இடப முத்திரையை இட்டார்.

காப்பவரு மீனமுற- காப்பவரும் + மீனம் + உற
காப்பவரும் + ஈனம் + உற

காப்பவராகிய சொக்கர் தம்முத்திரையாகிய இடபத்தை விட் வேறு ஒருவருடைய முத்திரையை இடப் பிரியப் படுவரோ? திரும்பிப் பூட்டி முத்திரை இட்டபடியால் காவலாளர் பேரில் குற்றம் வராமல் அவர்களைப் பாது காத்தார்.

35. தண்ணீர்ப்பந்தல் வைத்தது.

[வைத்துத்

சொன்னமதில் சூழ்மதுரைச் சொக்கர் தண்ணீர்ப் பந்தர்
தென்னவன்சே னைத்தாகந் தீர்த்தனர்கா ணம்மானை
தென்னவன்சே னைத்தாகந் தீர்த்தனரே யாமாகில்
பொன்னருளேன் செய்யார் புலிக்கொடியாற் கம்மானை
புலியாங் கொடியவனைப் போற்றுவா ரம்மானை

(அ-பு) பாண்டியனுடைய சேனையின் தாகந்தீர்த் தது. புலிக்கொடியாற்கு-சோழனுக்கு. புலியாம் கொடிய வனை- வியாக்கிரபாதரை. போற்றுவார்- அடியார்க்கெளி யவனுவார்.

36. இரசவாதஞ் செய்தது.

ஈசர்சொக்கர் பூவணத்தி லேயிருந்த பொன்னனையார்
மாசிலர்க்கன் போடுங்காண் வாதத்தா ரம்மானை
மாசிலர்க்கன் போடுங்காண் வாதத்தா ராமாகில்
பேசுவதேனையமறப் பித்தரென்றே யம்மானை
பித்தரென்பா ரையரென்றும் பேசுவா ரம்மானை.

(அ-பு) வாதம் - இரசவாதம், வாக்குவாதம்.

வாக்கு வாதத்தில் கெட்டிக்காரனெனில் அவரை ஏன் பித்தனென்று சொல்லவேண்டும்.

ஐயர் - மேலானவர், உடையவர்.

37. சோழனை மடுவில் வீட்டியது.

ஊழ்வினைதீர்த் தன்ப ருயிர்க்குயிராய் நின்றோங்கி
வாழ்கடவு ளார்தென் மதுரேச ரம்மானை
வாழ்கடவு ளார்தென் மதுரேச ராமாகில்
கீழ்மடுவில் வீழ்த்ததென்ன கிள்ளிதனை யம்மானை
கிள்ளிவலி கண்டுபொ றுக் கின்றதரி தம்மானை.

(அ-பு) கிள்ளி-சோழன். வலி- நிஷ்டூரம், கொடுமை

38. உலவாக்கோட்டை அருளியது.

அன்னமளி யென்று நல்லார்க் கன்றுலவாக்கோட்டைநெல்
துன்னுபயி ரிட்டார்போற் சொக்கர்தந்தா ரம்மானை [லைத்
துன்னுபயி ரிட்டார்போற் சொக்கர் தந்தா ராமாகில்
செந்நெலிட்டால் வேண்டாமோ செய்யாளு மம்மானை
செய்யாளே வல்லவர்தாந் தேடவல்லா ரம்மானை.

(அ-பு) செய்யாள் - பயிர் செய்வோர், இலக்குமி. செய்யாளே வல்லவர்—செய்யான் + ஏவல்லவர் - செய்யாளை வைத்து வேலை வாங்குபவர்(மடியின்றி) இலக்குமியால் ஏவப்படுவர். இவ்விருவரும் பணந்தேட வல்லார்.

39. மாமனாக வந்து வழக்குரைத்தது

சோமனணி வோர்மதுரைச் சொக்கர்வணி கக்குழந்தை
மாமனென வந்து வழக்குரைத்தா ரம்மானை
மாமனென வந்து வழக்குரைத்தா ராமாகில்
ஆமகவை யேன்கறிகொண் டாரறிவோ டம்மானை
அறிவிமயக் கந்தனைப்பெற் றார்செய்யா ரம்மானை.

(அ-பு) ஆ! மகவை—பிள்ளையை, சிறுத்தொண்டர் மகனாகிய சீராளனை; சிவபிரான் நல்லறிவோடு பிள்ளைக் கறி சாப்பிட்டார். அறிவு மயக்கம் தன்னைப் பெறமுர் சாப்பிடார் என்பது வெளிப்படை.

அறிவு-ஞானம் எனப்பொருள்கொண்டால்ஞானமே திருமேனியாகவுடைய கந்தவேளைப் பெற்றவர் செய்ய மாட்டார் எனக் கூறலாம்.

40. வரகுணனுக்குச் சிவலோகம் காட்டியது.

அரியமரர் சூழ்மதுரை யங்கே வரகுணனுக்
கரியசிவ லோகங்காட் டண்ணல்சொக்க னம்மானை
அரியசிவ லோகங்காட் டண்ணல்சொக்க னுமாகில்
அரியயன்மே லானபொரு ளாகுமே யம்மானை
ஆகுமே லப்பொருட்டு மப்பன்கா ணம்மானை.

(அ-பு) அரிஅயன் முதலியோர் திருவாலவாயைச் சூழ்ந்து கொண்டு தரிசனத்துக்குக் காத்திருந்தும் வர

குணபாண்டியருக்குச் சிவலோகத்தைச் சொக்கர் காட்டினுர். அப்படியாஞல் வரகுணன் திரிமூர்த்திகளிலும் உயர்ந்தவஞகக்காணப்படுகிருனே அங்ஙனம் உயர்ந்தவஞயினும் இவனுக்கும் அப்பனல்லவா சொக்கன்.

41. விறகு விற்றது.

திசையோர் பணிந்தேத்துந் தென்மதுரைச் சொக்கலிங்கர்
விசையாய் நடந்து விறகுவிற்ரு ரம்மானை
விசையாய் நடந்து விறகுவிற்ரு ராமாகில்
இசையார் விறகுவிலைக் கேலுமோ வம்மானை
ஏலுமதனை யெரிக்க வென்ரு லம்மானை.

(அ-பு) இசையார்- பாடகர். விறகு விலைக்கு ஏலுமா- ஏலாது ஆஞல்ஏலும் அதனை எரிக்க. இது வெளிப்படை. ஏலும்எரிக்க மன்மதனைஎன்பது புதைப்பொருள்.

42. திருமுகங் கொடுத்தது.

வாரணத்தை யீன்ற மதுரேசர் பாணனுக்காச்
சேரலன்பா லீந்தார் திருமுகமொன் றம்மானை
சேரலன்பா லீந்தார் திருமுகமொன் ருமாகில்
ஆரணஞ்சொல் லைமுகமே லாறுண்டோ வம்மானை
ஆறுமுகம் பெற்றவரென் ருரறியா ரம்மானை.

(அ-பு) வாரணம்- யானை, விநாயகர். திருமுகம்- கடிதம் (தபால்) "மதிமலி புரிசைமாடக் கூடல்" என்னுந் திருப்பாசுரம். சிவபிரான் ஐந்து திருமுகங்களை உள்ளவர் அவர் ஒரு திருமுகத்தைத் பாணன் மூலமாகச் சேரமானுக்கு அனுப்பிஞலும் ஐந்து திருமுகங்கள் உள்ளவரே கொடுத்த திருமுகத்தைச் சேர்த்தால் ஆறுமுகம் பெற்று உள்ளவர்போற்காணப்படுகிருர். உண்மையாய்

அவர் ஆறுமுகம் பெற்றவர்தான். அதாவது ஆறுமுகம் என்னும்கந்தனைப் பிள்ளையாய்ப்பெற்றவரே. ஆறுமுகத்தைப் பெற்றவராகையால் ஒருதிருமுகத்தைக் கொடுத்து ஐந்து திருமுகத்தோடு இப்போதும் இருக்கிறார் என்று கொள்க.

43. பலகை இட்டது.

சொக்கன் மதுரேசன் சொல்லிசைவாய்ப் பாணரைமுன்
வைக்கும் பலகைமிசை வண்மையா யம்மானை
வைக்கும் பலகைமிசை வண்மையா யாமாகில்
தைக்கும்பூப் பாணனையேன் ஞன்வையா னம்மானை
தான்வைத்தான் பின்புசித்தர் தையலைக்கண் டம்மானை.

(அ-பு) பூப்பாணன்- காமன்— சித்தஜன். சித்தர்-சித்தன். இது சித்தசன்என்பதின் இடைக்குறையாலான மரியாதைப் பன்மை. சித்தர்தையல்- இரதி தென்னாட்டில் இன்றும் பாணர்கள் தையற்காரர். இதுதொனிக்கத் தைக்கும் பூப்பாணனென்று சிலேடையாகக் கூறினார்.

பாணனை ஏன் (உயிருடனிருக்க) வையான். வைத்தான் (உயிருடனிருக்க)வைத்தான் (இரதிகேள்விப்படி)

44. இசைவாது வென்றது.

ஆற்றுமது ரேசரிசை யாழ்ப்பாணர் தேவிக்காச்
சாற்றுமிசை வாதெளிதாத் தான்வென்ரு ரம்மானை
சாற்றுமிசை வாதெளிதாத் தான்வென்ரு ராமாகில்
மாற்றரிதோ வன்பர் மறவாத வம்மானை
மறவாத வன்பருடன் வாதவற்கே தம்மானை

(அ-பு) பாணபத்திரன் மனைவி பாடினி பேரில் பாண்டியன் பொருமைகொண்டு அவன் பாட்டைக்குறை

வாய்ச் சொல்லச் சமயம் பார்த்திருந்தான். ஈழதேசத்திலிருந்து ஒரு பாடினி வந்ததும் அவளைப் பாணபத்திரன் மனைவியுடன் பாடவிட்டு, ஈழப்பாடினியே மேலானவள் என்றான். சொக்கர் இருவரையும் பாடச் செய்து பாணன் மனைவி பாட்டே திறமுள்ளதென்றார்.

மறவாதம்- நீதியில்லாத தர்க்கம். அப்படியான தீர்ப்பு. அன்பர் மறவாதம்— அன்பருக்கு நேர்ந்த நீதியற்ற தீர்ப்பு மறவாத- இங்கே சிலேடை.

45 பன்றிக்குட்டிகளுக்கு முலை கொடுத்தது.

நின்றெனையா ளுங்கயற்க ணேயர்சொக்கர் தாயெனப் போய்ப்
பன்றிமக்க ளுண்ணமுலைப் பால்கொடுத்தா ரம்மானை
பன்றிமக்க ளுண்ணமுலைப் பால்கொடுத்தா ராமாகில்
மன்றமுலைப் பாலாண்பால் வந்ததென்னோ வம்மானை
வாராதோ பச்சை மதலைபெற்றார்க் கம்மானை.

(அ—பு) மன்ற- அசைச்சொல். பச்சைக் குழந்தையைப் பெற்ற தாய்க்குப் பால் சுரத்தல் வழக்கம். உலக முழுவதையும் பெற்றவராகிய இறைவனுக்குச் சுரக்காதோ. இத் தாய்மையைச் சிறப்பித்தே,

"அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே" என்றார் மணிவாசகர்.

46. பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கியது.

துன்னியசீர்த் தென்மதுரைச் சொக்கேசர் பன்றிகளைத்
தென்னவற்கு மந்திரியாய்ச் செய்தனர்கா ணம்மானை
தென்னவற்கு மந்திரியாய்ச் செய்தனரே யாமாகில்
பன்னுமவர்க் கேதுபட்சம் பன்றிமே லம்மானை
பன்றியறி யாதவர்க்குப் பட்சமன்றோ வம்மானை.

(அ-பு) பன்றியறியாதவர்-பன்றிருபம்கொண்ட விஷ்ணுவிஞல் அறியக்கூடாத சிவபிரான்

பட்சம்-அன்பு. அன்பும் சிவமும் ஒன்றென்பது திருமந்திரம். சிவபிரான் அன்புருவம்.

அன்புஞ்சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவதாரு மறிந்திலார்
அன்பே சிவமாவதாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப்பாரே.

47. கரிக்குருவிக்கு உபதேசஞ் செய்தது.

உண்மை கரிக்குருவிக் கோதியெளி யார்வலியார்க்
கெண்மடங்காக் கினர்மதுரை யீசஞ ரம்மானே
எண்மடங்காக் கினர்மதுரை யீசஞ ராமாகில்
அண்ணலெளி யார்க்கெளியா ராவதே னம்மானே
ஆவதுபோ லேனலைந்தா ராரூரி லம்மானே

(அ-பு) கரிக்குருவிக்கு வலியான் என்ஞெருபெயர். உண்மை-ஞானம். கரிச்குருவி,காக்கைமுதலியவற்றைத் துரத்திக் கொத்துவதைக் காணலாம்.

எளியார்க்கு எளியாராதல்- அடியாருக்கு அடியராதல் ஆரூரில் அலைந்தது பரவையாருக்காக.

48. நாரைக்கு முத்தி கொடுத்தது.

மின்ஞர் மணிகயற்கண் மேவுசுந்த ரேசர்வந்து
நன்ஞரைக் கோர்வீடு நல்கிஞ ரம்மானே
நன்ஞரைக் கோர்வீடு நல்கிஞ ராமாகில்
முன்னமனைக் கையான் முடிப்பரோ வம்மானே
முடிக்கவல்லார் காலாலே முன்னமனை யம்மானே.

(அ-பு) வீடு-விடுதல் "வீடென்றறைதரு சொற்குப் பொருளோ விதேகலே" (வேதகீசர் பதிகம்) செய்த வினை முடிந்து அல்லது விட்டுவந்து இருக்கும் இடத்துக்கும் தொழிலாகு பெயராய் வீடு எனும் பெயர் வந்தது

ஆன்மா நல்வினை தீவினை ஆகிய இவற்றை ஒழித்து விடுதல் வீடாகும். இதை மோட்சமென்பர் சைவர்; நிர்வாணமென்பர் புத்தர். ஆகையால் வீடு வசிக்கும் இடத்துக்கும் மோட்சத்துக்கும் பொருளாயது.

முன்னமனே- முன்னம்+மனே; முன்+நமனே; நமனைக் காலால் (உதைத்து) முன் முடித்தாரென்பது வெளிப்படை.

49. திருவாலவாயானது.

பண்டோர் சொக்கேசர் பணியாற்பல் கோடியண்டங்
கண்டோர் மதுரையெல்லை காட்டினரம்மானே
கண்டோர் மதுரையெல்லை காட்டினராமாகில்
கொண்டால வாயெனப்பேர் கூடுவதே தம்மானே
கூடாதா கூடலெனக் கூறுநகர்க் கம்மானே.

(அ-பு) பண்டோர்—பழையவர் பல்கோடி பண்டங் கண்டோர்- பலகோடி அண்டங்களை வகுத்துச் செய்தவர் பணியால்-தன்னுடைய பாம்பைக்கொண்டு ஒரு பாண்டியன் மதுரையின் எல்லை தெரியமாட்டாதவனுய்ச் சொக்கரைக் கேட்க, அவர் தன்னுடைய பாம்பை விடுத்துக் காட்டச்செய்தார். பாம்பு எல்லைவழியே ஊர்ந்து போய்க் காட்டியது. இதனுலே மதுரைக்குத் திருவாலவாய் என்னும் பெயர் வந்தது"

ஆலவாய்-ஆலத்தை (விஷத்தை) வாயிலுள்ளது அதாவது பாம்பு. திருவாலவாய்க்குக் கூடல் என்றும் பெயர் உண்டு.

50. சுந்தரப்பேரம் பெய்தது.

மந்திர வேதத்தின் மதுரேசன் பாண்டியர்க்காச்
சுந்தரப்பே ரம்பெய்தான் சோழன்மே லம்மானை
சுந்தரப்பே ரம்பெய்தான் சோழன்மே லாமாகில்
வந்தெதிர்த்த போரின் மலையாதோ வம்மானை
மலைவில்ல னென்றொருபேர் வாய்த்ததவற் கம்மானை.

(அ-பு) மலைதல்-மயங்குதல். மலைவில்லார்-மேருவை வில்லாகவுள்ள சிவபிரான் மலைவு இல்லாதவர்.

51. சங்கப்பலகை தந்தது.

கருணைநிறை கூடற் கயற்கண்மகிழ் சொக்கேசர்
ஒருகையிற்சங் கேந்திக் குயர்ந்தவரா னம்மானை
ஒருகையிற்சங் கேந்திக் குயர்ந்தவரே யாமாகில்
தருமவர்தங் கையினிற்பல் சங்கமுண்டோ வம்மானை
சங்கப் பலகையறத் தாமளித்தா ரம்மானை.

(அ-பு) ஒருகையிற் சங்கேந்தி - திருமால். சங்கம்-சங்கு. சங்கத்தார் கூடும் சபை நக்கீரர் முதலானோருக்கு ஒருசாண் சதுரமுள்ள சங்கப்பலகையொன்றைச் சொக்கர் அளித்தார். தகுந்த புலவர்களைக் காணின் அது வளர்ந்து இடங்கொடுக்கும். இதனால் சங்கப்பலகை அற அளித்தார் என்றார். அற-முழுதாக, வேறு வேண்டிய தின்மையாய்.

52. தருமிக்குப் பொற்கிழியளித்தது.

நல்கவெனப் பொற்கிழியை நற்றருமிக் கென்றுகவி

சொல்லிவிட்டார் தென்மதுரைச் சுந்தரனு ரம்மானை
சொல்லிவிட்டார் தென்மதுரைச் சுந்தரனு ராமாகில்
வல்லகவிக் கேன்கீரன் மாசோது மம்மானை
மாசோதி யாரடியார் வாயுள்ளா ரம்மானை.

(அ-பு) மாசு-குற்றம். மாசோதியான் - மாமணிச் சோயாதிஞகிய சிவபிரான் அடியார்வாயுள்ளார்-தொண்டருள் ஒடுக்கம். வாய்-இடம்.

''சோதியே சுடரே சூழொளி விளக்கே'' என்பது **திருவாசகம்**.

53. கீரனைக் கரையேற்றியது.

சொக்கேசன் சங்கந் துதித்திடப்பொற் றாமரைவீழ்
அக்கீர னைக்கரையேற் றன்புவைத்தா னம்மானை
அக்கீர னைக்கரையேற் றன்புவைத்தா னுமாகில்
தக்கனுக் காட் டுத்தலையேன் றுன்வைத்தா னம்மானை
தானுமன் றுட்டிற் றலைவைத்தா னம்மானை.

(அ-பு) மன்றுட்டில்-கனகசபையில் நடனஞ் செய்வதில். தலைவைத்தான்-விசேஷமுள்ளவனுனுன் தக்கன் யாகத்தில் அவன் சிவநிந்தனை செய்தபடியால் அவனது தலையை வெட்டி ஆட்டின் தலையை வைத்தார் வீரபத்திரர். ஆட்டுத்தலை வைத்தல் இங்கே சிலேடை.

54. கீரனுக்கு இலக்கணம் உபதேசித்தது.

தலத்துறைநக் கீரனுக்குத் தாமுரைத்தி டாதுசொக்கர்
இலக்கணம் போதித்தா ரிருந்தவரா லம்மானை
இலக்கணம் போதித்தா ரிருந்தவரா லாமாகில்
மலைத்தமி ழறிந்துரைக்க மாட்டாரோ வம்மானை
மாட்டா ரறிவரியார் மற்றறிவா ரம்மானை

(அ-பு) இருந்தவர்- இரும்+தவர் = பெரிய தவத்தினர்; இங்கே அகத்தியமுனிவர். மலைத்தமிழ்- பதங்களின் புணர்ச்சியாலும் சிலேடைக்கருத்துகள் அமைவதாலும் ஆகுபெயர், அன்மொழித்தொகை என்னும் இலக்கணப் பாட்டாலும் கல்வி கற்கத் தொடங்குவோனை மலைக்கச் செய்யும் தமிழ்

இன்னும் பொதியமலையிலிருக்கும் அகத்தியர் முதலானோரால் வளர்க்கப்பட்ட தமிழ் என்றுஞ் சொல்லலாம். "பொருப்பிலே பிறந்து," என்னும் பாரதச் சிறப்புப்பாயிரத்தையும் "அகத்தியன் பயந்த செஞ்சொல்" என்பதையும் உற்றுநோக்குக.

அறிவரியார் - அறியச் சக்தியில்லாத மாந்தர்கள். மாட்டார்- அறியமாட்டார் அறிவரியார் - மற்றவர்கள் அவரை அறிந்துகொள்ள முடியாதவர். மாட்டார்-தமிழை அறிந்துகொள்ள முடியாதவரானால். மற்று ஆர் அறிவர்-வேறு எவர்தான் அறிந்துகொள்ளக்கூடும் அவரவர் மனதின்கண் நின்று அறியச் செய்பவன் அவனேயாகையால் என்று பொருள் கொள்க.

55. சங்கத்தார் கலகந்தீர்த்தது.

ஆசையமு தங்கயற்க ணன்பர்சொக்கர் வந்துதவ
நேசர்வினை தீர்ப்பது நிகழ்த்துமுல கம்மானை
நேசர்வினை தீர்ப்பது நிகழ்த்துமுல காமாகில்
பேசுசங்கத் தார்கலகம் பெற்றதே எம்மானை
பெற்றவர் தீர்ப்பதுவாய் பேசுவதன் றம்மானை.

(அ-பு) ஆசை அமுதம் கயற்கண் அன்பர் சொக்கர்-ஆசை உண்டாக்குபவளும் அமிர்தம்போன்ற மொழி

யையுடையவளுமாகிய மீனாட்சியம்மையின் அன்பரா யுள்ள சொக்கர். சொக்கர் தன்னைத் தியானிப்பவரின் வினையைத் தீர்ப்பவரென்று உலகம் கூறும். சொக்கர் சங்கத்தில் ஒருவராகையால் வினை தீர்ப்பவர்; கலகமுண் டாகாமல் அங்கேயே தீர்த்துக் கொள்ளலாமல்லவா?

பெற்றவர் தம் பிள்ளைகளின் பிணக்கைத் தீர்ப்பது அவர்களின் கடன். நாம் வாயால் பேசவேண்டியதல்ல. அந்தச் சிந்தனை நமக்கு வேண்டியதில்லை.

56. இடைக்காடன் பிணக்குத் தீர்த்தது.

நின்றசொக்க ராலயத்தி னீங்கிவட வாலவாய்ச்
சென்றிடைக்கா டன்பிணக்குத் தீர்த்துவந்தா னம்மானை
சென்றிடைக்கா டன்பிணக்குத் தீர்த்துவந்தா னாமாகில்
தன்றிருத்தாள் வாடத் தருமமோ வம்மானை
தருமனையந் நாளுதைத்த தாளன்றோ வம்மானை.

(அ-பு) இடைக்காடர் ஒரு தேர்ந்த புலவர். இவரது புலமையை மதித்துப் பாண்டியன் சன்மானஞ் செய்யாது விட்டான். இடைக்காடர் அதிகஅவமானமடைந்து சொக்கரிடம் போய் முறையிட்டு ஆலயத்துக்கு வெளியிலே போயிருந்தார். இவர் மனவருத்தத்தைச் சகிக்க முடியாமல் சொக்கரும் இவர்பின் சென்று இவரோடுகூட இருந்தார். ஆலயத்தில் சொக்கரில்லாது வெளியேறி இடைக்காடருடன் இருப்பதை அறிந்த பாண்டியன் இடைக்காடரிடஞ் சென்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டு வேண்டிய மரியாதையைச் செய்தான். தருமன்-நமன்

57. வலை வீசியது.

வானோர் தொழுமதுரை வள்ளல் பராவனெனத்
தானே வலைவீசுந் தண்கடல்வா யம்மானை
தானே வலைவீசுந் தண்கடல்வா யாமாகில்
மேனாள் விருப்பமுண்டோ மீனிலவற் கம்மானை
மீனோகண் ணாண்மனைவி மீனவன்றா னம்மானை.

(அ-பு) மீனோகண்ணாள்-மீனாட்சி. மீனவன்-பாண்டியன். சொக்கருக்கு மீன்பேரில் விருப்பமிருப்பதனால் மீனாட்சியைக் கலியாணஞ் செய்து மீனவனாக அரசு புரிந்தார் பராவன்பரன்.

58. வாதவூரடிகளுக்கு உபதேசித்தது.

வாத வூரற்கு மதுரேசர் பெருந்துறையிற்
போத வுபதேசம் புகன்றனர்கா ணம்மானை
போத வுபதேசம் புகன்றனரே யாமாகில்
காதலரைத் தங்குருவாக் காண்பரோ வம்மானை
காணார்யார் தங்குருவாக் காதலரை யம்மானை.

(அ-பு) வாதவூரடிகளுக்கு ஞானோபதேசம் செய்ய வல்லராயின், ஏன் அவர் மகன் முருகன் குடிலைப்பொருளை அவருக்கு உபதேசிக்க வேண்டும்? காதலரைத் தம் குருவாகக் காணாதார் யார்? பிள்ளைகள் பிதாவின் அந்தியகாலத்தில் மூலமந்திரம் முதலியன உபதேசிப்பது இப்போதும் வழக்கத்திற் காணலாம்.

ஒருவன் மரணபரியந்தம் வைராக்கிய பக்தியுடன் சிவத்தியானஞ் செய்யலாம். மரணமடையும் போது அறிவு மயங்கிச் செபம் செய்ய முடியாமற் போகும்.

அவ்வேளையில் பிள்ளை தந்தைக்காக அவர் காதில் கேட்கும்படி செபஞ்செய்து சிவத்தியானத்துடன் ஆன்மா பிரியும்படி செய்வன். இதுபற்றியே **பட்டினத்தார்**

ஐயுந்தொடர்ந்து விழியுஞ்சொருகி யறிவழிந்து [யான்
மெய்யும் பொய்யாகிவிடுகின்ற போதொன்று வேண்டுவன்
செய்யுந்திரு வொற்றியூருடையீர் திருநீறுமிட்டுக்
கையுந்தொழப் பண்ணியைந்தெழுத் தோதவுங் கற்பியுமே.

என்று பாடினர்.

59. நரி பரியாக்கியது.

பெரியமது ராபுரியிற் பேராளேன் பாண்டியன்முன்
நரியைப் பரியாக்கு நற்றொழிலோ னம்மானை
நரியைப் பரியாக்கு நற்றொழிலோ னுமாகில்
அரியவித்தை கற்றவனுக் கன்னமரி தம்மானை
அன்னமொரு பக்கத் தமருமவற் கம்மானை

(அ—பு) ''அரிய வித்தை கற்றவனுக்கு அன்னம் அரிது'' என்பது ஒரு பழமொழி. எவ்வேலையிலேனும் ஒருவன் அதிகவியுற்பத்தியுள்ளவனுயிருப்பின் அவனிடம் தரித்திரம் குடிகொண்டிருக்கும். இது உலகானுபவம். அன்னம் இங்கே உவமை ஆகுபெயராய் உமையாளைக் குறிக்கும்.

60. பரி நரியாக்கியது.

விரித்தபுக ழாலவாய் மேவுசுந்த ரேசர்பெரும்
பரித்திரளைத் தாநரியாப் பண்டுசெய்தா ரம்மானை
பரித்திரளைத் தாநரியாப் பண்டுசெய்தா ராமாகில்
மரித்தலிலா வாசியையேன் மாய்வித்தா ரம்மானை
மாயத்தான் யாவும் வகுத்தனர்கா ணம்மானை.

(அ-பு) வாசி- குதிரை; அச்சுவினி; சுவாசம், பரிகள் நரியானபோது பரிகளை மாய்வித்ததாகக் கொள்ளப் பட்டது. மாய்வித்தல்- இறக்கச் செய்தல். மரித்தலில்லா வாசி- அச்சுவினி; அழிவின்றி வானத்தில் காணப்படும் நட்சத்திரம் 27-ல் ஒன்று. மாயத்தான் யாவும் வகுத்தனர்— எது உண்டாக்கப்படுமோ அது அழியும் எனபது கொள்கை. வகுத்தல்- உண்டாக்கல். வேறு அர்த்தமாக மாயத்தான் இந்த வகுத்தல்— மாயத்தினல் இந்த உற்பத்தி.

61. மண் சுமந்தது.

தண்சுமந்த வையைதனிற் சார்ந்துமது ரேசனன்னீர்ப்
பெண்சுமந்தோன் மண்சுமந்தான் பிட்டுக்கா யம்மானை
பெண்சுமந்தோன் மண்சுமந்தான் பிட்டுக்கா யாமாகில்
மண்சுமந்து மாற்றடியேன் வாய்ந்தனன்கா ணம்மானை
மாவினைத்தீ மேலாக்கு வந்திதனு லம்மானை.

(அ-பு) நல்நீர்ப் பெண் சுமந்தோன். கங்கையைச் சடையில் வைத்திருக்கும் சிவபிரான். மாற்றடி = பாற்று + அடி = மாற்றினல் அடிக்கப்பட்ட அடி. மாறு-மலாறு அல்லது பிரம்பு. மாவினைத் தீ மேல் ஆக்குவந்தி மாவினைப்பிசைந்துஉருட்டி அடுப்புத்தீமேல் வைத்துப் பிட்டுச் சமைக்கும் மலடி.

62. பாண்டியன் சுரந் தீர்த்தது.

தேசுமது ரேசன்கூன் றென்னவனுக் கன்றுதவப்
பூசுரனு லேசுரநோய் போக்கினு னம்மானை
பூசுரனு லேசுரநோய் போக்கினுனுமாகில்
மாசுரநோய் தீர்த்தவன்கூன் மாற்றுனோ வம்மானை
மாற்றினுன் கூனிலா வமிசமென் றம்மானை

(அ-பு) கூன்தென்னவன்—கூன்பாண்டியன். பூசுரன்- இங்கே திருஞானசம்பந்தர்; பூசுரன் ஞானசம்பந்தன் என்னும் தேவாரத்தையும் காண்க. "போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்."

கூனிலா- கூன் + நிலா — பிறை. சுரநோய் தீர்த்தவன் கூன் மாற்றமாட்டானா? கூனும் மாற்றினான். தான்சடையில் தரித்திருக்கும் சந்திரவமிசத்தவனென்று கண்டல்லவோ மாற்றினான்.

63. சமணரைக் கழுவேற்றியது.

அன்றுசொக்கர் மெய்யருள்கண் டஞ்சிக் கழுவேறிப்
பொன்றினரெண் ணாயிரம்பேர் பொய்யமண ரம்மானை
பொன்றினரெண் ணாயிரம்பேர் பொய்யமண ராமாகில்
நின்ற வமணருட னீறுமே யம்மானை
நீறானார் நஞ்சுண்டார் நிச்சயித்தி லம்மானை-

(அ-பு) பொன்றினர்- இறந்து போயினவர். நின்றவமணருடல் நீறுமே— கழுவேறாது நின்றவர்கள் எல்லாருஞ் சைவத்தைத் தழுவி திருநீறு பூசிக் கொண்டனர். நஞ்சுண்டார் நிச்சயித்தில் நீறானார்— நஞ்சுண்ட சிவபிரானை முழுமுதற் கடவுளென்று துணிந்து திருநீறு பூசினர்.

64. வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்தது.

சொன்னவணி கக்கொடிக்காச் சொக்கேச ரங்கழைத்தார்
வன்னி கிணறிலிங்க மாமதுரைக் கம்மானை
வன்னி கிணறிலிங்க மாமதுரைக் காமாகில்
பன்னினர்தா மேதேனோ பரவைமுன்சென் றம்மானை
பரவையயே மோடிவரப் பார்த்ததுமுண் டம்மானை.

(அ-பு) ஒருவணிகப் பெண்ணுக்காகச் சொக்கர் வன்னியும் கிணறும் இலிங்கமும் புறம்பயத்திலிருந்து மதுரைக்கு அழைத்து அவள் கலியாணத்தை மெய்ப்பித்தது. இப்படிப் பொருள்களை வேண்டிய இடத்துக்கு வரவழைக்கும்சிவபிரான் பரவையாரை அங்ஙனமே அழைத்துக் கொள்ளாமல் ஏன் தூது போய்ப் பலமுறை அலைந்தார் நள்ளிருளில்?

ஒருபரவையல்ல ஏழு பரவை ஓடிவரப் பார்த்தவர் சிவபிரான். ஏழு பரவை-ஏழுகடல். (ஏழு கடல் அழைத்த திருவிளையாடல் இங்கே நோக்கத்தக்கது)

பன்னினர் தூது — தூது சொன்னார். பன்னுதல் — சொல்லல். கொடி—உவமை ஆகுபெயராய்ப் பெண்ணைக் குறிக்கும்.

திருச்சிற்றம்பலம்

திருவிளையாடல்
தோத்திரமணிப் பாடல்கள்

1. சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர
முத்தியான முதலைத் துதிசெயச்
சுத்தியாகிய சொற்பொரு ணல்குவ
சித்தியானை தன்செய்ய பொற்பாதமே.

2. பூவிநாயகன் பூமக ணாயகன்
காவிநாயக னாதிக் கடவுளர்க்
காவிநாயக னங்கயற் கண்ணிமா
தேவிநாயகன் சேவடி யேத்துவாம்.

3. அருவாகி யுருவாகி யருவுருவங்
கடந்துண்மை யறிவானந்த
உருவாகி யளவிறந்த வுயிராகி
யவ்வுயிர்க்கோர் உணர்வாய்ப் பூவின்
மருவாகிச் சராசரங்க ளகிலமுந்
தன்னிடையுதித்து மடங்கநின்ற
கருவாகி முளைத்த சிவக்கொழுந்தை
யாயிரங்கண் ணுங்களிப்பக் கண்டான்.

4. பராபர முதலேபோற்றி பத்தியில் விளைவாய்போற்றி
சராசர மாகிவேருய் நின்றதற் பரனேபோற்றி
கராசல வுரியாய்போற்றி கனகவம்பலத்து ளாடும்
நிராமய பரமானந்த நிருத்தனே போற்றிபோற்றி

5. பெரியதினும் பெரியதுமாய்ச்
சிறியதினுஞ் சிறியதுமாய்
அரியதினு மரியதுமா
யெளியதினு மெளியதுமாய்க்
கரியதுமாய்க் காண்பானுங்
காட்சியுமா யவைகடந்த
துரியமுமாய் நின்ருயென்
சோதனைத்தோ நின்னியல்பே

6. எண்ணிய எண்ணி யாங்கே
யான்பெற முடித்தாய்போற்றி
பண்ணியன் மறைகள் தேருப்
பான்மொழி மணுளபோற்றி
புண்ணியர் தமக்கு வேதப்
பொருளுரை பொருளேபோற்றி
விண்ணிழி விமான மேய
சுந்தர விடங்கபோற்றி

7. ஈசனடிக் கன்பில்லார்போ
லெளியாரில்லை யாவர்க்கும்
ஈசனடிக் கன்புடையார் போல்
வலியாரில்லை யாவர்க்கும்
ஈசனடிக் கன்பின்மையிஞ
லெளிதாய்த்திரிந்த விக்கயவாய்
ஈசனடிக் கன்புடைமையிஞல்
வலிதாயிற்றே யெவ்வுயிர்க்கும்,

8. மண்ணாய்ப் புனலாய்க் கனலாய் வளியாகி
விண்ணா யிருசுடரா யித்தனையும் வேறாகிப்
பண்ணா யிசையாய்ப் பனுவலா யெங்கண்ணுங்
கண்ணாளு யென்னுறுகண் காணுவா றென்கொல்லோ

9. பெரியாய் சரணம் சிறியாய் சரணம்
கரியாகிய அங்கணனே சரணம்
அரியாய் எளியாய் அடிமாறி நடம்
புரிவாய் சரணம் புனிதா சரணம்.

10 திருத்தனே சரணம் சரணம் மறைச்சென்னிமேல்
நிருத்தனே சரணம் சரணம் நிறைவேதநூல்
அருத்தனே சரணம் சரணம் திருவாலவாய்
ஒருத்தனே சரணம் சரணங்க ளுனக்குநாம்.

திருவிளையாடலின் பயன்

11 திங்களணி திருவாலவா யெம்மண்ணல்
திருவிளையாட்டிவை அன்புசெய்து கேட்போர்
சங்கநிதி பதுமநிதிச் செல்வமோங்கித்
தகைமைதரு மகட்பெறுவர் பகையைவெல்வர்
மங்கல நன்மணம் பெறுவர் பிணிவந்தெய்தா
வாழ்நாளும் நனிபெறுவர் வானுடெய்திப்
புங்கவரா யங்குள்ள போகமூழ்கிப்
புண்ணியராய்ச் சிவனடிக்கீழ் நண்ணி வாழ்வார்.

திருச்சிற்றம்பலம்.

திருநீற்றின் பெருமை.

ஸ்ரீ பஞ்சாட்சரப் பொருளைத் தன்னுள் அடக்கியிருத்தலால் "மந்திரமாவது நீறு" எனவும், வேதத்திற் கூறிய உண்மைப் பொருளாதலின் "வேதத்திலுள்ளது நீறு" எனவும், ஞானத்தைக்கொடுப்பதால் "போதந்தருவதுநீறு" எனவும் எவர்களாலுந் துதிக்கப்படும் பெருமையுடையதாதலால் "பரவவினியது நீறு" எனவும், மெய்யன்போடு நினைப்பவர்களுக்குப் பத்தியை வளரச் செய்வதால் "கருதவினியது நீறு" எனவும், "பத்தி தருவது நீறு" எனவும், இம்மையின்பத்தையும் மறுமையின்பத்தையும் கொடுப்பதால் "இருமைக்குமுள்ளது நீறு" எனவும், ஆணவமலத்தாலுண்டாகும் ஆசையைக் கெடுப்பதால் "பெருந்தவத்தோர்களுக்கெலாம் ஆசை கெடுப்பது நீறு" எனவும், ஆன்மாவுக்கு உட்பகையாகவிருக்கிற மயக்கத்தை நீக்குவதால் "துயிலைத் தடுப்பது நீறு" எனவும், பாவத்தையறுப்பதால் "பாவமறுப்பது நீறு" எனவும், தருமத்தைத் தன்மாட்டடக்கியிருத்தலால் "புண்ணியமாவது நீறு" எனவும், புண்ணியவான்களுக்கு அருளென்னுங்குழவியை யெய்தச் செய்தலால் "பாக்கியமாவது நீறு" எனவும், அழியாப் பொருளைக் கொடுக்கவல்லதாதலால் "அருத்தமாவது நீறு" இன்பத்தைக் கொடுத்தலால் "ஏலவுடம்பிடர் தீர்க்குமின்பந் தருவது நீறு" எனவும் மோட்சத்தைக் கொடுப்பதால் "முத்திதருவதுநீறு" எனவும் திருஞானசம்பந்த சுவாமிகள் திருநீற்றுப் பதிகத்தில் திருநீற்றைச் சிவபெருமானெனப் பாவித்துத் துதித்திருக்கின்றனர்.

அச்சிட்டோர்: ஜோதிமணி பிரஸ், மதுரை—'74.

ஆலமே யமுதமா கவுண்டு வானவர்க் களித்துக்
காலனை மார்க்கண்டற்காக் காய்ந்தனை யடியேற் கின்று
ஞாலநின் புகழேயாக வேண்டு நான் மறைகளேத்துஞ்
சீலமே யாலவாயிற் சிவபெருமானே யென்றார்

(பெரிய புராணம்)